தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987 ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை

பங்குனி 27, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு”

குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலை பெறும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. கணபதி அவர்கள் 24—3—1987 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு டி. கணபதி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் 'பழவூர்' தொகுதியிலிருந்தும், மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் 'நாங்குனேரி' தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

[பேரவைத் தலைவர்] [1987 ஏப்ரல் 10

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு.

366 (*வினா எண் 9611)—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால் இருபோக நிலம் வைத்திருக்கும் குத்தகை சாகுபடிதாரர் ஒரு போகம் நடும்போது அதற்குள்ள குத்தகையை வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில வெளியேற்றத்திடமிருந்து பாதுகாப்பு) சட்டத்தில் இருபோகம் அல்லது ஒருபோகம் பயிரிடும் குத்தகை சாகுபடிதாரர் என்று வகைப்படுத்தப்படவில்லை. 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு நியாய ஊதியச் சட்டத்தின் கீழ், சாகுபடி செய்யும் விளைச்சலில் குத்தகைதாரரும், நிலச் சுவான்தாரரும் 75 :25 விகிதப்படி பிரிந்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக இருபோக சாகுபடி செய்யப்படும் நிலத்தில் ஒருபோகம் சாகுபடி செய்ய நேர்ந்தாலும், மேற்குறித்த விகிதப்படி நிலச் சுவான்தாருக்குக் குத்தகைத் தொகை அளிக்கப்பட வேண்டும். மேலும் குத்தகை என்பது நிலச் சுவான்தாருக்கும், குத்தகைதாருக்கும் உள்ள ஒப்பந்தம். இதில் அரசு தலையிட்டு வசூல் செய்து கொடுக்கும் வினா எழாது.